

**வாரந்தோறும் ஒரு தீபம்!**

**உம்முடைய வசனம் என் கால்களுக்கு தீபமும், என் பாதைக்கு வெளிச்சமுமாயிருக்கிறது. (சங்கீதம்119:105)**

(வாரம் முழுவதும், புத்தொளி சுடரில் நடத்தும் தெய்வீக செய்திகள்!)

(வியாழன்தோறும்)

| 10.08.2023 | 09. ‘மனுஷீக’ இருள் அகற்றும் சபை வேண்டும்! |
|---|---|



**ப**ரிசுத்தாவியின் மிகச் சிறந்த ஆர்வம் என்னவென்றால், ‘‘வாஞ்சையுள்ள எந்த இருதயத்தையும் ஊடுருவிச் செல்வதுதான்!’’ அவர், சபையில் வாஞ்சையுடன் அமர்ந்திருப் போரின் மனதை ஊடுருவிச் செல்வார்! ஆவியில் ஊடுருவிச் சென்று ‘மனுஷீக ஆவியை’ அகற்றுவார்! ‘மனுஷீக ஆவி’ மானிட இருதயத்தில் வாசம் செய்யும் வெற்றிடமான ஆவியாகும். அதில் மனுஷீக போட்டி, பொறாமை, பிரிவினை.... வாசம் செய்யும் இருளை அகற்றி, ‘தேவனையே’ ஜனங்களின் இருதயத்தில் கொண்டு வரும் கிரியை, சபையில் எப்போதும் நடந்துகொண்டே இருக்க வேண்டும். பரிசுத்தத்திற்கு உண்டாகும் கேட்டை, ஆவியானவர் அந்த சபையில் நிரந்தரமாய் எதிர்த்து நிற்பார்.

*ஒரு பாவ மனிதனை சபையில் மனம் குளிர வைத்துப் பாருங்கள், அதுபோதும்.... ஒளி சபையிலிருந்து விரட்டப்படும்!*

இதுபோன்ற சபையின் நிலைமையைக் குறித்து தேவன் சொல்லி முடியாத வேதனை அடைவார்! பாவத்திற்கு அநேக பக்கங்கள் உண்டு. அது ஏராளமான நோய்களைத் தாங்கியிருக்கும் ஒரு மனிதனைப்போல் உள்ளது. அந்த நோயாளியை அந்த பாவம் கொன்றுவிடும் என்பது மாத்திரம் இருந்தால் ஒன்றுமில்லைதான்..... ஆனால், அந்த பாவ மனிதன் மூலமாய் தோன்றும் முரட்டாட்டங்கள், மாறுபாடான நடக்கைகள், மீறுதல்கள் ஆகிய அனைத்தும், விலையேறப் பெற்றவைகளையும் (உண்மை சீஷர்களையும்) பாதிக்கச் செய்யும் என்பதை சபை அறிந்திருந்து விழிப்பாய் செயல்பட வேண்டும்.

**– ரத்னம்**